JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//251 /2014 |
| | : | Prosecution P.W -- 6 |
| NAME | : | சுதா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 19.08.2025.

முதல் விசாரணை :-

நான் தற்போது சங்கரன்கோவிலில் எனது கணவருக்கு சொந்தமான மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். நான் முன்பு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது 18.03.2013 அன்று நண்பகல் 4.00 மணியளவில் 40 வயதுடைய வல்லராமபுரத்தை சேர்ந்த பொன்னுத்தாய் என்பவர் அவரது கணவர் மாரியப்பனுடன் மருத்துவ உதவிக்காக அழைத்து வரப்பட்டார். அவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் படி அவரை நன்கு அடையாளம் தெரிந்த 3 நபர்கள் 18.03.2013 அன்று காலை 11.30 மணியளவில் அவரது வீட்டின் அருகே வைத்து இரும்பு கம்பியால் தாக்கியதால் காயம் ஏற்பட்டதாக தெரிவித்தார். அவரை பரிசோதித்ததில் அவருக்கு சிதைவு காயம் 2x1x1x cm அளவில் தலையின் தோல் பகுதியில் காணப்பட்டது. அவரை பரிசோதித்ததில் அவரது நாடித்துடிப்பு இரத்த அழுத்தம் சாதாரணமாக இருந்தது. அவரை சிகிச்சைக்கு அளித்து உள்நோயாளியாக பெண்கள் மருத்துவபகுதியில் அனுமதித்தேன்.

அவருக்கு வழங்கிய காயச்சான்று சாதாரண காயம் என சான்றளித்தேன். அவரை சிகிச்சையிலிருந்து 26.08.2013 அன்று விடுவிக்கப்பட்டார். **மேற்படி காயச்சான்று அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3 நபர்கள் அடித்ததாக சொல்லி உள்ளதில் யார் யார் என்று பெயர் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்லும் சிறு காயம் தெரு லைன் பைப்பில் தவறி விழுந்தாலும் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi